
Y'S MEN INTERNATIONAL

YSC OF GCT YOUTH

# அறிவொளி

பதிப்பு 1

நவம்பர், 2020



ஏட்டிலே ஏணி வைத்து

ஏணியாய் ஏடு வைத்து

எட்டடி எடுத்து வைத்து

ஏற்றத்தின் வழிவகுத்து

என்றென்றும் வாழியவே!

## இதழாசிரியர் கடிதம்...

"அறிவொளி"–யின் இதழாசிரியர் என்பதில் பெருமகிழ்ச்சி. அதனினும் பெருமகிழ்ச்சி இவ்விதழின் பிறப்பு தமிழ் மீது எமது GCT– யின் YSC கொண்ட பற்று என்பது. தமிழினைப் போற்றும் கல்லூரியில் தமிழினைப் போற்றும் சங்கத்தில், தமிழினைப் போற்றும் நண்பர்கள் இது களிப்பு!

இவ்விதழுக்கு பெரிய உந்துதலாய் அமைந்த அணி எம் கல்லூரி இரண்டாம் ஆண்டு மாணாக்கர்களே! தமிழில் கவிதைகள் கதைகள், ஏன் தமிழ்ப் பண்பைப் போற்றும் புகைப்படங்கள், ஓவியங்கள் என அள்ளிக் குவித்து ஊக்கமாய் அமைந்த கலைஞர்களுக்கு எமது நிர்வாகக் குழுவின் பாராட்டுகள். இவர்களது ஆர்வத்தின் அடுத்த படியாய் தமிழ்சார் போட்டிகளும் நடத்தி ஆச்சரியம் அளித்தனர்.

"அறிவொளி" இம்முத்துக்களுக்கே சமர்ப்பணம்.

இதழினின் இன்றியமையா பகுதியாய் மாணாக்கரின் தமிழ் படைப்புக்கள், போட்டி விவரங்கள் மற்றும் தமிழ்கலாசாரத்தின் பழம்பெருமை பறைசாற்றும் துணுக்குகள்.

இதழாசிரியராய், இரண்டு ஆண்டுகளுக்குப் பின் தமிழில் எழுதவும் தமிழ் அமுதை உணரவும் ஆற்றலாய் அமைந்த என் தோழர்களுக்கு இதயம் கனிந்த நன்றி!

இதழாசிரியர்
தமிழ் மலர் மதி.த

# அரணுக்கு அணிவிளக்கு

**கல்லூரி முதல்வர் அவர்களுக்கு,**



தலைமையின் தொனியில்
பெருமையாய் அமர்ந்து
இளமையின் சுவடுகளாய்
உலவும் இந்த
பொறி உலகின் புதல்வர்களை
புன்னகையோடு வழிநடத்தினீரே!
முதுபெரும் மொழிகளை தங்கள்
அரும்பெரும் ஒலிகளால்
ஆர்ப்பரித்து எங்களை அழகுபடுத்தினீரே!

பொறியியலை பொன்னாய் பதித்து
வாழ்வியலை வளமாய் வாரிக் கொழித்தீரே!
பெண்ணியத்தின் பேராற்றல்
இந்நிலத்தின் நியதியென
தம் கண்ணியத்தால் காட்சிப்படுத்தினீரே!
கல்லூரி சுவடுகளின்
கறைபடியாத பதிவுகளில்
தங்களது அரும்பெரும் மொழிகள்
எமை என்றென்றும் ஆர்ப்பரிக்கும்....

அன்போடும், பண்போடும்

**Y's Service Club of GCT YOUTH**

சங்க ஆலோசகர் அவர்களுக்கு,
சேவையின் தேவைதனை
செம்மையாய் உணர்த்தினீரே
மாண்புமிகு மாணவர்களை
மேன்மைமிகு மேதையாய் ஆக்கினீரே
மழலையாய் மலர்ப்பாதம், பதித்த எமை,
மகத்துவமாய் நெறிப்படுத்தினீரே
நிகழ்கால நிலை உணர்த்தி
வருங்காலத்தின் வழி வகுத்தீரே
நம் சங்கம் எனும் காவியத்தின்
மங்கா புகழ் முகப்புரையே,
சுடர் விளக்காயினும்
தூண்டுகோல் வேண்டும்
எங்களின் ஊன்றுகோலாய்
என்றும் நீங்கள் வேண்டும்

—கனிவோடும், பணிவோடும்

***'Y's Service club of GCT YOUTH***



Yy. பாலகிருஷ்ணன்
(சங்க ஆலோசகர்)

# நினைவலைகள்

தன்னலமற்ற சேவையினை நோக்கமாய் கொண்டு, இந்நிலம் மீதினில் ஈடு இணையன்றி இயங்கி வரும் உலகளாவிய ஒய்ஸ்மென் பேரியக்கத்தின் ஓர் கிளையாய், கொங்கு தமிழ் கொஞ்சும் கோவை மண்ணின், தொழில்நுட்பம் விளைத்திட்பமாய் வீற்றிருக்கும் அருமை மிகு அரசினர் தொழில்நுட்பக் கல்லூரி தன்னில் மரியாதைக்குரிய கல்லூரி முதல்வர் அவர்களின் அனுமதியோடும், ஆலோசகர் முனைவர்.பாலகிருஷ்ணன் அவர்களின் ஆதரவோடும், பட்டயத் தலைவராக செல்வன் ஆனந்தகுமார் தலைமையில் ஜனவரி 5, 2019–ல் *'Y's Service club of GCT YOUTH"* சீரும் சிறப்புமாக துவங்கப்பட்டது.

முத்தான முதலாண்டு (2018–2019) செவ்வனே நிறைவடைந்த நிலையில் இரண்டாம் ஆண்டிற்கான (2019–2020) பதவியேற்பு விழா ஜூலை 20, 2019–ல் சிறப்பாக நடைபெற்றது. இரண்டாவது முறையாக செல்வன் ஆனந்தகுமார் தலைமை பொறுப்பேற்று சிறப்பாக வழிநடத்தினார். "கண்டுபிடிப்புகளின் தாய் தேவை, தேவைகளை பூர்த்தி செய்யும் உன்னத செயல் சேவை." இவ்வரிகளின் இலக்கணமாய் இன்றியமையா சேவைகள் புரிந்து இரண்டு ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவுபெற்றது. தொடர்ந்து மூன்றாம் ஆண்டிற்கான (2020–2021) பதவியேற்பு விழா 13 ஆகஸ்ட், 2020–ல் நடைபெற்றது. செல்வன்.தினேஷ்பாபு தலைமையேற்று வழிநடத்தி வருகிறார். எங்களது சேவைப் பணிகள் வருங்காலங்களிலும் செவ்வனே தொடரும்.

"வெறுங்கை என்பது மூடத்தனம்
விரல்கள் பத்தும் மூலதனம்"

# அறிந்தும் அறியாததும்

**அறிவு என்பது ஆழ்கடல்**
**ஆர்ப்பரிக்கும் அலைகடல்**
**அள்ளக் குறையா அற்புதங்கள்**
**ஆற்றல் முத்துக்களின் ஆலயம்**

ஆர்வமே அறிவின் அடிப்படை என்று அறிவுறுத்தும் வகையில் அமைந்த வினாடி வினாப் போட்டியே “அறிந்ததும் அறியாததும்” அன்றாடம் நாம் காணும், கேட்கும், கற்கும் சில அடிப்படை விஷயங்களைப் பற்றிய நாம் அறியாத தகவல்களைத் தளமாகக் கொண்டு நடத்தப்பட்ட நிகழ்வு. இதன் இன்றைய நடைமுறைக்கு தகுந்ததாய் Zoom என்ற தளத்தில் நேரலையாக நடத்தப்பட்ட இந்நிகழ்வு பெரும் வரவேற்பையும் நாற்பதுக்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களையும் கொண்டு மிகச் சிறப்பாய் நடைபெற்றது.

‘கல்வி கரையில’ என்பதன் மறு உருவம் இந்நிகழ்வு என்பதில் ஐயமில்லை.

நிகழ்ச்சி அமைப்பாளர்கள் Yy.மணி பாரதி.T மற்றும் Yy.ஹர்ஷிதாதேவி K பகிர்ந்த கருத்தாவது “கணிதம் மற்றும் அறிவியலில் கற்கும் சின்னங்கள், குறிகளின் பிறப்பு பற்றி அறியும் ஆர்வமே இவ்வெண்ணத்தைத் தூண்டியது.




“பங்கேற்பாளர்களும் தங்களின் வியப்பை வெளிப்படுத்தியவண்ணமே இருந்தனர். இதற்கு இப்படி ஒரு வரலாறா” என்பதே பலரது வியப்பின் காரணமாய் இருந்தது என்றனர் இருவரும்.

# நாகரிக நகரம்:

பழம்பெரும் நாகரிகம் நம் தமிழரது. ஆனால் நமக்கு தமக்கை நாகரிகம் உண்டென அறிவோமா நாம்?

கிரேக்கம். இன்றுள்ளதுபோல் கிரேக்கம் ஒரு நாடாக இல்லாது ஓர் இயக்கமாய் அறியப்பட்டிருந்தது. அவ்வியக்கத்தில் பல நாடுகள் இணைந்திருந்தன. அனைத்துக்கும் பொதுவாய் ஒரு அம்சம் - கிரேக்கமொழி.

டோரியர்கள் என்ற கூட்டத்திடம் தப்பி கிரீஸ் நகரத்தில் தலைமறைவான பல்வேறு இடத்தைச்சேர்ந்தோர் தத்தமது இடத்திலிருந்து எடுத்து வந்த பழக்க வழக்கங்களை, நம்பி-க்கைகளைப் பகிர்ந்து ஒன்றாய் வாழத் துவங்கி-னர். அதுவே கிரேக்கம். சிலர் தமது குழுவுடன், கிரேக்க கலாச்சாரம் மீது உண்டான ஈர்ப்பால் குடிபெயர்ந்தனர்.

கிரேக்கர்கள் சண்டைப் பிரியர்கள். எனினும் அவர்களது ஆட்சியமைப்பு முறை தற்கால அரசியலமைப்பை ஒத்திருந்தது இதன் அடிப்படை எக்ளேஷியா எனப்படும் மக்கள் சபை. வாக்குரிமை ஹெலீயா என்னும் நீ-தியமைப்பு ஸ்ட்ராட்டெகாய் எனும் தலைமை கொண்ட ராணுவம் என அரசாட்சியின் ஒவ்வெ-வாரு துறையும் முறையே நெறிமுறைகள் கெ-ாண்டதாய் வடிவமைக்கப்படிருந்தது. இதற்கான பயிற்சிகள் கல்வித் திட்டத்தில் வழங்கப்பட்டு, துறைசார் நிறுவனங்களாய் செயல்பட்டன.

நகர ஆட்சி முறையை பின்பற்றிய கிரேக்கர்கள், அதனால் பூண்ட பூசல்களைத், தம் கலாசாரத்தை விரிவுபடுத்தும் வடிகாலாகப் போற்றினர். நித்தம் ஒரு போர் நடைபெற்றாலும் போரில் ஈட்டும் பொன்-பொருளில் ஒரு பகுதி ஆலயத்திற்கு நன்கொடையாய் வழங்கினர்.

.





கோவிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழ்ப் பழமொழி. கிரேக்கர்களும் ஆலயம் நிர்மாணிப்பதில் சளைத்தோரல்ல. தமிழரைப் போன்றே இயற்கை அம்சங்களான ஐம்புதங்களுக்கும், பாம்பு போன்ற பிராணிகளுக்கும் இறை வடிவம் வழங்கி வழிபட்டனர். ஆலயங்களின் புனிதம் போற்ற உள்ளே நுழைந்தவர் குற்றவாளி ஆயினும் கைது செய்யவோ, தாக்கவோ கூடாது என்பது விதி.

கிரேக்கர்களின் வழிபாட்டு முறைகளும், பூஜை பொருட்களும் தமிழக வழிமுறைகளோடு ஒத்தவையாய் இருந்தன. இத்தனை பக்தியுடன் இருந்த அம்மக்கள் ஒரு சில மூடநம்பிக்கைகளால் பயமும் கொண்டு வாழ்ந்தனர். பூனை குறுக்கே போதல், தும்மல், கிரகணம் போன்றவை சில.

கிரேக்கர்களின் குடும்ப அமைப்பும் நம்மையொத்ததே. கூட்டுக் குடும்பங்களுக்கும் உறவுகளுக்கும் முன்னுரிமை கொண்டே அவர்களுது சமூக அமைப்பு இயங்கியது.

தமிழுக்குக் கதி எனப்படும் கம்பராமாயணம், திருக்குறள் போல வாழ்வியலுக்கான படிப்பினை கொண்டவையாய் கிரேக்கத்தில் கருதப்படும் இரு நூல்கள் ஹோமர் என்ற மகாகவியின் இலியட் மற்றும் ஒடிசியாகும்.

மேற்காசிய நாடுகளின் கலாச்சார முன்னோடியாய் விளங்கிய கிரேக்கத்திற்கு வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் இடமுண்டு என்றால் மிகையாகாது. அகிலம் போற்றும் அறிஞராம் சாக்ரடீஸ் தோன்றிய இடமல்லவா அது!

-நடைபோடுவோம்.




## நூல் நூற்போம்:

நூல்வாசிப்பு மொழிப் புலமைக்கு அடித்தளம். ஆனால், நூல்களில் பல வகை உண்டு. தமிழில் இயல், இசை, நாடகம் என்போம். இவற்றிலே இசைக்கு எழுத்து வடிவமிட்டால் கவிதை.

கவிதை நூல்கள் கற்பனைக்கு வளப்பம் கொடுப்பவை. ஆனால் பல நூல்கள் நம் அறியாமையால் அறிவுக்கு எட்டாமல் அழிந்துவிடுகின்றன. அப்படிப்பட்ட ஒரு நூல்தான் கலீல் ஜிப்ரானின் மணலும் நுரையும்.

ஆங்கிலக் கவிஞர்களில் இலக்கியப் படைப்புகளுக்குப் பெயர்பெற்றவர் ஜிப்ரான். வாழ்க்கைத் தத்துவங்களை வார்த்தைப் புதிர்களில் வர்ணிக்கிறார்.

“நம்மில் சிலர் எழுதும் மைபோல் இருக்கிறோம். சிலர் தாள் போல்.
நம்மில் சிலர் கருமையாக இல்லாது போயிருந்தால் ஊமைகளாகி இருப்போம்.
நம்மில் சிலர் வெண்மையாக இல்லாது போயிருந்தால் பார்வையற்றவர்களாகி இருப்போம்”

எண்ணத்திற்கும் இதயத்திற்கும் இடையேயான யுத்தம் மனிதனுக்கு ஓய்வதேயில்லை. இதனை எடுத்துரைக்கிறார்.
“நமது மனம் பஞ்சு போன்றது, நம் இதயம் ஓடை போன்றது.
விசித்திரமாக இல்லையா? நம்மில் பலர் இயங்குவதை விட உறிஞ்சுவதையே தேர்ந்தெடுக்கிறோம்”

“நாம் அடிக்கடி நாளையிலிருந்து கடன் வாங்குகிறோம் நம் நேற்றுகளின் கடன்களைக் கொடுத்துத் தீர்க்க”

-நேரத்தின் நிலுவைக் கணக்கு

“உன் இதயம் ஒரு எரிமலையானால் உன் கரங்களில் பூக்கள் மலருமென்று எப்படி உன்னால் எதிர்பார்க்க முடியும


-எண்ணத்தின் இலக்கணம்”

“உங்கள் தவறான செயல்களைக் கண்டு தாமும் அதில் பாதிக் குற்றவாளியென எவர் உணர்கிறாரோ அவரே உண்மையான நீதிமான் ஆவார்”

-நீதிக்கு ஒரு நெறி

ஆங்கிலத்தில் இலக்கியக் கருவிகளின் இருப்பிடமாய் புனையப்பட்ட இக்கவிதை நூல் எளிய தமிழில் சிற்பி என்னும் ஆசிரியரால் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் நம்மைச் சுற்றி நடப்பவற்றைக் காணும் முன் நமக்குள் ஒரு தேடலைத் தோற்றுவிக்க முனையும் அற்புதக் கலை களஞ்சியம்.

## கலையரங்கம்:


அன்பின் திருஉருவாய்
ஆளுமையில் பேருருவாய்
இயக்கத்தின் இசையாய்
இருளிலும் இனிமையாய்
உன்னதத்தின் உயிர்ப்பாய்
ஊக்கத்தின் ஊற்றாய்
எண்ணத்தின் எழிலாய்
எளிமையின் ஏவலாய்
ஒப்பில்லா ஒயிலாய்
ஓசைமிகு ஓவியமாய்
ஔநிலம் போற்றும் அணிகலனாய்
—தமிழ்ப் பெண்.
படைப்பு:
சுதந்திரா

# எழுந்து வாரீர்..

வேதனையில்
பொழுதுகள் விடிந்தாலும் -எம்
தேசத்தின் விடுதலையே
உயிரினும் மேலானதென்று
களமாடிய மறவர்களின் வீரத்தால்
பெறப்பட்டது இச்சுதந்திரம்.. !

எத்தனை உடல்கள் மண்ணில் புதைந்-
திருக்கும்? ஏத்தனை கூக்குரல் விண்ணைப்
பிளந்திருக்கும்? எத்தனை தலைகள் தூக்கில்
தொங்கியிருக்கும்?
எத்தனை துயரங்கள் மறைக்கப்பட்டிருக்கும்?

கருச்சுமந்த தாய் வயிற்றில் நெருப்பெரிய..
அந்நெருப்பினில் விடுதலைத் தீ மூண்டெரிய..
தியாகியாய் வீரனாய் மரவனாய் மாண்டாயே..

பத்துமாதம் சுமந்த தாயை விட
இறப்புக்குப் பின்னும் சுமக்கும்
தேசத்தையே உயிராக எண்ணி.. !
சுதந்திர கதவுகளை
திறந்து வைத்துவிட்டு
மண்ணினுள் மறைந்த
தியாகவீரர்களே..... !
உங்களை எப்படி மறப்போம்
மறந்தால் எப்படி இந்தியனாவோம்?

ஆறடிக்குள் துயிலும் அற்புதங்களே!
ஏங்கள் ஆணிவேரான ஆலமரங்களே!
விடுதலை தந்த வீரவேங்கைகளே!
காவியத்தின் கதாநாயகர்களே!

உங்களை எப்படி மறப்போம்?
மறந்தால் எப்படி இந்தியனாவோம்?

இளையவர்களே
அடிமைப்பட்ட பாரதத்தை பார்த்த
ஏளன கண்கள் பிதுங்கும்படி
சரித்திரம் படைத்திடுவோம் !

அணுகுண்டுகளையே
அள்ளி வீசினாலும்
அச்சமின்றி தாவிப்பிடித்து
அண்டத்தையே அதிரவைப்போம்.. !

நிமிர்ந்து வா இந்தியனே...
அடிமைப்பட்ட தேசத்தின்
வளர்ச்சிகண்டு
அகிலமும் நடுங்கட்டும்.. !
இந்தியன் என்ற
பெயரைக் கேட்டால்
அண்டமும் அதிரட்டும்.. !

எழுந்து வாரீர்..
அகில முதல்..
சிகரம் வரை.. !
ஆயிரம் வாய்ப்புகள் உண்டு.. !
உலகை அறிந்திடுவோம்
உழைப்பால் உயர்ந்திடுவோம்
நமக்கென ஓர் சரித்திரம் படைத்திடுவோம்.. !

-சரவணக்குமார் GV




Follow us:
ysyouthgct.social
தமிழனின் பகிர்ந்துண்ணும் பண்பு :
தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
–(208–211–பட்டினப்பாலை)